16/11/2020

# "எனது கனவு பாரதம்"

## குறிப்புச் சட்டகம்

1. முன்னுரை :-
2. கல்வியே செல்வம் :-
3. பசிப்பிணி இல்லா பாரதம் :-
4. பெண்குழந்தைகள் காக்கப்பட வேண்டும்
5. சுகாதாரமான பாரதம் :-
6. ஊழலற்ற பாரதம் :-
7. முடிவுரை :-

### முன்னுரை :-

என் தாய்த்திரு பாரத நாடு வளமை மிக்கது, செழுமை மிக்கது, இளமையானது.
வேற்றுமையில் ஒற்றுமை காணும் என் பாரத நாட்டில் சில சிறந்த மாற்றங்கள் நிகழ வேண்டும் என்பது என் உள்ளத்துக் கனவு, என் கனவு பாரதத்தை இக்கட்டுரையில் காண்போம்.

### கல்வியே செல்வம் :-

என் கனவு அனைவரும் கல்வி அறிவு பாரதம், நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனும் படிக்க வேண்டும், அனைவருக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும். சிறார் தொழிலாளர்கள், சாலையோர சிறார் தொழிலாளர்கள் இருக்கவே கூடாது, சிறுவர்கள் அனைவரும் கட்டாயம் கல்வி பயில வேண்டும், பள்ளி கல்வியில் இருந்து கல்லூரிக்கு அனைத்து மாணவ, மாணவியர்களும் சென்று உயர்கல்வி பயில வேண்டும். கல்வியே செல்வம் அனைவரும் கல்வி கற்பதே அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் உயர்த்தும் என்பதை அனைவரும் உணர வேண்டும் என்பது என் கனவாக இருக்கிறது.

## பசிப்பிணி இல்லா பாரதம் :-

விவசாயம் நம் நாட்டின் முதுகெலும்பாக உள்ளது. எத்தனையோ இலட்சம் மக்கள் பசியோடு உறங்குகின்றனர். இந்நிலை மாற வேண்டும் பசிப்பிணியை ஒழிக்க நாட்டில் 50% மேல் மக்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டும். அரசு பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறது. ஆனாலும் தனி மனிதன் ஒவ்வொருவருக்குள்ளும் விவசாயத்தில் ஈடுபாடு வரவேண்டும். தேவைக்கு அதிகமான உற்பத்தி இருந்தால் மட்டுமே கடைகோடி மக்கள் வரை பசியின்றி வாழ முடியும்.

## பெண் குழந்தைகள் காக்கப்பட வேண்டும் :-

மிகச்சிறப்புமிக்க உலக நாடுகள் போற்றும் பண்பாடு, கலாச்சாரம் மிக்க நம்நாட்டில் கலாச்சார சீரழிவுகளும் நடந்து கொண்டிருப்பது மிகவும் வேதனையளிக்கிறது. என் தாய்திருநாட்டின் அனைத்து பெண்களும் என் சகோதர சிறுமிகளும் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகள் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். என்னுடைய இந்த கனவு முதலில் நனவாக வேண்டும். அது நம் கைகளிலே உள்ளது.

## சுகாதாரமான பாரதம் :-

நம் நாட்டில் சுத்தம், சுகாதாரத்தை நாம் அனைவரும் முன்வந்து மேம்படுத்த வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும் நம் சுற்றுப்புறத்தையும், நம் சாலையையும், நம் தெருமுழுவதையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்று மனதில் உறுதியுடன் செயலாற்ற வேண்டும். பிணியில்லா சுகாதாரமான

பாரதம் அமைய வேண்டும். செயற்கையை விட்டு இயற்கைக்கு மாறினாலே சுகாதாரம் மேம்படும். அனைவருக்கும் தரமான மருத்துவம் கிடைக்க வேண்டும்.

## ஊழலற்ற பாரதம்:-

என் பாரதநாடு எங்கும் எதிலும் ஊழல் காணப்பட கூடாது, நாம் தான் சமுதாயம், நாம் தான் பாரதம். மற்றவர்களை குறை கூறுவதை விட்டுவிட்டு தரமான சேவைகள் கிடைக்க நாம் அதற்குரிய நேரத்தைக் கொடுக்க வேண்டும் பணத்தை அல்ல. ஒவ்வொருவரும் லஞ்சம் வாங்கவும் கூடாது, கொடுக்கவும் கூடாது என்று கோட்பாட்டோடு வாழ்ந்தால் லஞ்சம், ஊழல் ஒழிக்கப்பட்டுவிடும்.

## முடிவுரை:-

"தூக்கத்தில் வருவது கனவு அல்ல - நம்மை
தூங்கவிடாமல் செய்ய வருவதே கனவு".

என்றார் ஐயா அப்துல் கலாம்.
மேற்கண்ட "என் கனவு பாரதத்தை"
நான் நனவில் காணும் நாட்களை விரைவில் நாம் வர வேற்போமாக.